
www.vikatakavi.lk

60/-



இதழ் 03 பெப்ரவரி 2015

பெண்களுக்கான
சிறப்பம்சங்கள்

உலகக் கிண்ண
சிறப்பு பகுதி

Sri Lanka's First Augmented Reality Magazine

# விகடகவி

Redefining reading experience

இயக்குனர்
கிங் ரத்னத்தின்
நேர்காணல்



7STORIES
Ranjanas
Embrace Your
Tradition
RANJANAS
SINCE 1946
Ranjanas
(PVT) LTD
7STORIES
AMPLE PARKING
9AM-8.30PM
BEST SERVICE
Rs.
BEST PRICE
ATM AVAILABLE
www.7stories.lk
318, Galle Rd, Colombo | 011 2 590070
SCAN WITH LAYAR APP
& EXPERIENCE THE MAGIC
ar
Google play
Available on the App Store




Navavi

NAVAVI DESIGNING
& BESPOKE TAILORING

For the finest Cutomized Wedding Suits, Readymade Mens Wear,
Tailoring of uniforms and customized tailoring.

- No 525, Galle Road, Colombo 04
- No 28, Hill Street, Dehiwela
- No 2, 3rd floor, Majestic City, Bambalapitya
- No 3, Car Park, Galadari Hotel, Colombo 01

Tele : 011 2588485 Fax : 011 2502279


King Ratnam
Script Writer / Director

# இலங்கை சினிமாவின்

# கிங்

இலங்கையின் சினிமா துறையின்
முடி சூடா மன்னன் (King) வீட்டிற்கு
விகடகவி குழு சார்பாக சென்றிருந்தேன்.
அவரை ஏற்கனவே இலங்கையின் பலருக்கும் தெரியும்,
அவரது இசைதொகுப்புக்கள் , விளம்பரங்கள்,
ஆவணப்படங்கள், அவர் இயக்கிய, நடித்த
திரைப்படங்கள் பலரையும் வெகுவாக கவர்ந்துள்ளது.
King இன் பயணம் மேலும் தீவிரமாகியுள்ளது.
சினிமா இராச்சியத்தில் அவரது ராஜாங்க பணிகள்
எவ்வாறு தொடர்கிறது என்று
அவரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேன்.

-ரூபன்

**உங்களிடம் நான் கேட்க விரும்பும் முக்கிய கேள்வி, அது எல்லோருக்கும் இருக்கும் சந்தேகம் தான். உங்கள் பெயரில் ஆங்கில பெயரும் உள்ளது, தமிழ் பெயரும் உள்ளது. அதற்கு ஏதாவது சுவாரஷ்யமான கதை உள்ளதா?**

இது என்னுடைய இயற்பெயர்தான், நாங்கள் மூன்று சகோதரர்கள், 1978 இல் அண்ணா பிறந்தபோது அவர் ஈழத்தின் வசந்தம் என்று நினைத்து அவருக்கு ஈழ வசந்தன் என்று பெயர் வைத்தார் எனது அப்பா. 1979 இல் அஹிம்சாவாதம் பற்றி வாசிக்கும்போது காந்தி, மார்டின் லூதர் கிங் பற்றி வாசித்தாராம், ஆகவே எனக்கு கிங் ரத்னம் எனும் பெயரை வைத்துவிட்டார். ஆகவே இது என்னுடைய உண்மையான பெயர்தான்.

**இந்த துறையில் வரவேண்டும் என்ற ஆர்வம் சிறு வயதிலிருந்து இருந்ததா? அல்லது இடையில் வந்ததா?**

சிறு வயதிலிருந்து மேடை தான் எனக்கு மிகப்பிடித்த விடயம். நடிப்பு பாட்டு என்று மேடை சம்பந்தமான விடயங்கள் பாடசாலை காலத்திலிருந்தே எனக்கு உயிரோட்டமாக இருந்தது. கலைதான் வாழ்க்கையாக இருந்தது. படிப்பும் ஒரு பக்கமாக போய்க்கொண்டு இருந்தது. ஆனால் எந்த வழியாக பயணிக்கணும் என்கிற சரியான தரிசனம் இருக்கவில்லை. வசதியான குடும்ப பின்னணியும் எனக்கு இருக்கவில்லை. ஏதாவது செய்வோம் என்றுதான் முதலில் யோசித்தேன். 18 வயதிற்கு பிறகு.. வெவ்வேறு துறைகளில் பணி புரிவதற்கான நேர்முக பரீட்சைகளில் தோற்றியும் தோல்வியடைந்ததால் தொலைக்காட்சி துறைக்குள் வந்தேன். ஆனால் 14 வயதிலிருந்து தொலைகாட்சி துறையில் ஒரு ஆர்வம் இருந்தது. அதற்கு காரணம் Young Asia Television

**நீங்கள் இப்பொழுது இருக்கும் இந்த துறையில் நீங்கள் செய்த முதல் வேலைத்திட்டம் என்ன?**

தனியாக முதன்முதலில் ஒரு விளம்பரத்தைத்தான் இயக்கினேன். ஊழலுக்கு எதிரான ஒரு விளம்பரம்தான் அது.

**இதுவரை எத்தனை விளம்பரங்களை இயக்கியிருக்கிறீர்கள்?**


நான் கணக்கிட்டதில்லை. ஆனால் கிட்டத்தட்ட ஒரு 50 விளம்பரங்களை இயக்கியிருக்கிறேன்.

**உங்கள் இயக்கத்தில் உருவான பச்சைத்தங்கம் திரைப்படம் இந்திய பிரதமர் நரேந்திர சிங் மோடியின் முன்னிலையில் காட்சிப்படுத்தப்பட்டதாக அறியக்கிடைத்தது. அந்த அனுபவத்தை கொஞ்சம் சொல்லுங்கள்.**

அவருக்கு காட்சிப்படுத்தப்பட்டதாக நானும் கேள்விப்பட்டேன் (சிரித்துக்கொண்டே) . நானும் அங்கு இருக்கவில்லை. நான் வாழ்க்கை வரலாறு என்ற விடயத்தில் மிகுந்த ஆர்வம் உள்ளவன். வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் காட்சி வடிவில் உருவாக்கப்படவேண்டும் என்பது எனது ஆசை. ஆகவே முதன்முதலில் Individual Profiling என்ற விடயத்தை இலங்கையில் உருவாக்கினேன். அந்த வகையில் ஈஸ்வரன் பிரதர்ஸ் இன் திரு VTV தெய்வநாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. அது ஒரு வெற்றிகரமான வேலைத்திட்டம். அந்த படைப்பை உருவாக்குவதில் மிகுந்த அக்கரையுடன் செயற்ப்பட்டதால் இன்று வரை ஈஸ்வரன் பிரதர்ஸ் உடன் கைகோர்த்து வேலைகளை செய்து வருகிறேன். இதை பார்த்தவர்கள் யார் இவ்வாறு செய்தார்கள் என்று தேட ஆரம்பித்தார்கள். அப்படி தேடி வந்ததில் ஒன்றுதான் சித்தாலேப ஸ்தாபகர் ஹெட்டிகொட அவர்களின் வாழ்க்கை வரலாறு. முன்னாள் ஜனாதிபதி திரு மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வாழ்க்கை கதையை இயக்கும் வாய்ப்பும் அந்த நாட்களில் எனக்கு கிடைத்தது.



இந்த வரிசையில் மலையகம் சம்பந்தமாக ஒரு கதையை சொல்லலாம் என்று நினைத்தபோது உருவான கதைதான் பச்சைத்தங்கம். முதலில் அது ஒரு விவரண படமாக உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் காலப்போக்கில் அது ஒரு விவரணம் கலந்த சினிமாவாக உருவானது. Global organization of Indian origin people எனும் ஒழுங்கமைப்பின் மூலமாகத்தான் இந்த படைப்பை நான் உருவாக்கினேன். இதில் பிரதான நடிகர்களை தவிர ஏனைய அனைவரும் உண்மையான மலையக ஊழியர்கள். 5 நாட்களில் படப்பிடிப்பு செய்யப்பட்டது.



சினிமா துறையில் உங்கள் தூண்டுக்கோல் யார்?

உண்மையை சொல்வதாயின் எனக்கு தூண்டுக்கோலாக இருப்பது வாழ்கை . எல்லா வகையான இயக்குனர்களையும் நான் பார்த்து , ரசித்திருக்கிறேன். ஆனால் எனக்கு தூண்டுக்கோலாக இருப்பது வாழ்க்கைதான். அதை தேடித்தான் என் பயணம் தொடர்கிறது.

சினிமா என்னும் சொல்லை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

சினிமாவை சரியாக பாவித்தால் அது வாழ்க்கையை மாற்றக்கூடிய ஒரு கருவி என்றுதான் சொல்லுவேன். சினிமா என்று வந்துவிட்டால் இயக்குனர் கடவுளைப்போல என்று சொல்லலாம். எப்படி கடவுள் ஒரு படைப்பை வனைவாரோ.. அப்படிதான் இயக்குனரும் ஒரு படைப்பை வனைகிறான். Cinema its a Director's Art.


பின்னால் வந்துக்கொண்டிருக்கும் சினிமாவின் இளைய தலைமுறைகளின் பயணம் சரியான வழியில் இருக்கிறதா?

டிஜிடல் சினிமாவின் அறிமுகத்தால் சினிமாவுக்காக இருந்த வட்டம் உடைந்துவிட்டது. இப்போது யாரும் சினிமா செய்யலாம். அதுவொரு நல்ல விஷயம். ஆனால் அதில் துஷ்பிரயோகமும் நடக்கிறது. எந்தவித தேடலும் இல்லாமல் கேமரா இருக்கிறது என்பதற்காக படம் எடுக்க முடியாது. சினிமா என்பது கதை சொல்வது. அந்த கதை சொல்வதற்கான Tool ஆகத்தான் நாங்கள் Visual art இனை பாவிக்கிறோம். ஆகவே இளம் சினிமாக்காரர்கள் சுவாரஷ்யமாக எப்படி ஒரு கதையை சொல்வது என்பதை படிக்க வேண்டும். இயக்குனர் பாலு மகேந்திராவிடம் யாராவது சிஷ்யனாக சேரப்போனால் அவர்களிடம் பாட்டி வடை சுட்ட கதையை சொல்ல சொல்வாராம். ஏன் என்றால் பாட்டி வடை சுட்ட கதை பூரணமான கதை. ஒரு கதை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான மிக நெருங்கிய உதாரணம். நாங்க யாரும் உலகத்தில சொல்லாத கதைய சொல்லப்போவதில்லை, எல்லாம் சொன்ன கதையைத்தான் சொல்லப்போகிறோம். ஆனால் அதை எப்படி சொல்லப்போகிறோம் என்பதுதான் தேடல்.

கிங் ரத்னம்



இலங்கையில் ஒரு புதிய இசையை உருவாக்கும் முயற்ச்சியில் ஈடுபட்டுள்ளேன். இயக்குனர் அசோக ஹந்தகம அவர்களை என் குருநாதர் என்று சொல்லலாம். அவர் என்னை தள்ளிவிட்ட கடல்தான் நடிப்பு. என்னுடைய தொழில் சினிமாதான், அதோடு சேர்ந்து நடிப்பையும் இசையையும் செய்து வருகிறேன்.




அதே நேரம் இப்பொழுது இருக்கும் சினிமாத்துறையின் இளைஞர்களிடம் ஒரு ஆரோக்கியமான போட்டி காணப்படுகிறது. எங்களுக்கு முன்னாடி இருந்த சந்ததியினர் நண்பர்களாக இருப்பதில்லை. ஆனால் இப்பொழுது இருப்பவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து உழைக்கிறார்கள்.



நீங்கள் ஒரு இயக்குனர் தவிர்ந்து , ஒரு பாடகர் , நடிகர். இந்த மூன்று விடயங்களையும் நீங்கள் எவ்வாறு போஷிக்கிறீர்கள்?

பொதுவாக இந்த மூன்று விடயங்களையும் ஓரளவு நன்றாக செய்வேன். நடிப்பு என்பது சிறு வயதிலிருந்து நான் செய்துவரும் ஒன்று. மேடை நாடகங்களில் நடித்திருக்கிறேன். என்னுடைய ஆர்வம் எதில் அதிகமாக இருக்கிறது என்று கேட்டால், இசை என்றுதான் சொல்வேன். தெரிந்தோ தெரியாமலோ சினிமாவில் கால் பதித்துவிட்டேன். ஆனால் தொடர்ந்து இசையோடு இருப்பேன்.





'எனக்காக ஒருத்தி உயிர குடுக்க துணிஞ்சு இருக்கான்னா, இதை விட வேற என்னடா வேணும்..

ஆலோசனை இல்லாத இடத்தில மனிதன் வீழ்ந்து போவான்.

என்னோட ஆலோசகர்,என்னோட வழிகாட்டி, நலம் விரும்பி, நான் சிரிச்சா சந்தோஷப் படுற முதல் மனுஷன், நான் விழுந்தா தூக்கி விடவோ இல்ல ஆறுதல் சொல்லவோ வர முதல் மனுஷன். என்னோட கூட பொறக்காத அண்ணன், என் வயசுக்கு மீறுன நண்பன்.

அவருக்கு அப்பா இல்ல அம்மா மட்டும் தான். ஒரே ஒரு தங்கச்சி.

12 வயசுல அப்பா இறந்ததும் குடும்பத்த பார்த்-துக்க ஆரம்பிச்சவரு. அதுல இருந்து ஒவ்வொரு விஷயமும் அவ்வளோ பொறுப்பாஇருப்பாரு. கிறிஸ்துமஸ், நியூ இயர்க்கு எல்லாம் துணி எடுக்கும் போது தனக்கு ரோட்டுக் கடைலையும், அம்மா, தங்கச்சிக்கு மட்டும் பெரிய பெரிய கடைலையும் எடுப்பாரு.தனக்குன்னு வரும்போது கஞ்சனாவும், குடும்பத்துக்குன்னு வரும் போது ஊதாரி மாதிரி செலவு பண்ணுவாரு.

ஏன் அண்ணா இப்படினு கேட்டா? '

"நம்பள நம்பி இருக்குற குடும்பத்தோட எல்லா தேவைகளையும் செஞ்சு குடுத்து, அவங்கள சங்கடம் இல்லாம பார்த்துக்குரவன் தான்டா ஆம்பள. நான் எப்பவும் ஆம்பளையா இருக்க-னும்னுடா. நீயும் தான்னு சொல்லுவாரு.'

எல்லாரும் மீசை முளைச்ச பின்னாடி தான் ஆம்பளையா ஆவாங்க, எங்க ஜான் அண்ணா மீசை முளைக்குறதுக்கு முன்னாடியே ஆம்பள. நாம ஒருத்தர் கூட சேர்ந்து இருக்கோம்னா, அவங்களுக்கும், நமக்கும் இடைல கண்டிப்பா ஏதோ ஒரு பெரிய ஒத்துமை இருக்கும். அது தான் நாமள அவங்க கூட இணைச்சு இருக்கும். ஏதோ ஒரு விஷயம், படிப்பு இல்ல எதிர்கால கனவு, குடும்ப சூழ்நிலை இல்ல வாழ்க்கை முறை. இப்படி ஏதாவது ஒரு விஷயம் நம்மள அவங்க கூட ஒரு பிரிக்க முடியாத கயிறு கொண்டு பிணைச்சு இருக்கும். நீங்க வேணு-ம்னா யோசிச்சு பாருங்க, நீங்க ஒருத்தர் கூட சேர்ந்து இருக்க என்ன காரணம் ? இடைல ஏதோ ஒரு பெரிய ஒத்துமை இருக்கும்.

'அண்ணா கிறிஸ்டியன்,
அந்த அக்கா இந்து...
அதுனால அந்த அக்கா வீட்ல
இவங்க காதல ஏத்துக்கல.'

எனக்கும் ஜான் அண்ணாவுக்கும் இடைல பிரிக்க முடியாத கயிறு இல்ல, ஒரு கட்டு கம்பியே இருந்துச்சு. ரோல் மாடல்க்கு அர்த்-த ம . தெரியதப்பவே அவரு என்னோட ரோல் மாடல் ஆகிட்டாரு. என்னோட ஆதர்சன புருஷன். மளிகை கடைல மட்டும் இல்ல, காலையில நாலு மணிக்கு எந்திரிச்சு பால் போடா போயிருவாரு, அதே போல ஆறு மணிக்கு நியூஸ் பேப்பர்.

கொஞ்சம் கொஞ்சமா கஷ்ட பட்டு ஒரு மளிகை கடைக்கு முதலாளி ஆனாரு. அவரோட தங்கச்சிய நல்ல எடத்துல கல்யாணம் கட்டி குடுத்தாரு.

ஜான் அண்ணா கடைக்கு தினமும் ஒரு அக்கா பாக்கெட் பால் வாங்க வந்தா. அவங்களுக்கு கொஞ்ச நாளையே ஜான் அண்ணாவுக்கு டீ போட்டு தரனும்னு ஆசை வந்துருச்சு போல.



ஒரு நாள் அண்ணாக்கிட்ட வந்து லவ்வ சொன்னாங்க, ஆனா அண்ணா இல்ல எனக்கு நெறையா கடமைகள் இருக்கு, இது எல்லாம் ஒத்து வராதுன்னு சொல்லிட்டாரு.

ஆனாலும் அவங்க விடல. காதல்... சொல்லவா வேணும். அதுனால ஒரே நிமிசத்துல ஒரு மனுஷனுக்குள்ள வரவும் முடியும், விட்டு போகவும் முடியும், ஆனா அதோட தாக்கம் மட்டும் எப்பவும் கூடவே இருக்கும். ஒரு வழியா அண்ணாவுக்கும் காதல் வந்துருச்சு.

காதல்... ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ இருக்குற ஒரே ஒரு வழி தான் இந்த காதல்.

இது இல்லாம வாழ முடியாதான்னு கேக்காதீங்க. வாழுறாங்க நெறைய பேர் ஆனா அதுல உண்மை இல்ல. இங்க பொய்யா எவ்வளோ நாள் வேணுமாலும் வாழலாம், ஆனா உண்மையா ஒரு நிமிஷம் கூட வாழ முடியாது.

அண்ணா கிறிஸ்டியன், அந்த அக்கா இந்து... அதுனால அந்த அக்கா வீட்ல இவங்க காதல ஏத்துக்கல. அந்த அக்காவும் மருந்து குடிச்சு, தற்கொலைக்கு முயற்சி பண்ணி, அப்படி இப்படின்னு சிலபல போராட்டத்துக்கு அப்பறம் ஜான் அண்ணாவ கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. அன்னைல இருந்து அவங்க எனக்கு அக்கா இல்ல அண்ணி.

'எனக்காக ஒருத்தி உயிர குடுக்க துணிஞ்சு இருக்கான்னா, இதை விட வேற என்னடா வேணும்.. போதும் டா என்னோட மொத்த வாழ்க்கைக்கும் இவ மட்டும்னு', சொல்லி ரொம்ப சந்தோசமா வாழ ஆரம்பிச்சாரு.
அண்ணியும் அவருக்குன்னு படைக்க பட்ட பொண்ணு மாதிரி இருந்தாங்க. எல்லா மனுஷனுக்கு தன்னோட வருங்கால மனைவி பத்தி பெரிய எதிர்பார்ப்பு இருக்கும்.





வைத்தியர்

# இறைவனுடன் பேசுவோம்

நிர்மலா
பொல்லேங்கொட

**டெங்கு நோய் வந்தவர்களுக்கு பப்பாசி இலைச்சாறு கொடுத்தால் குணமாகிவிடும் என்று சொல்கிறார்கள்.இது எந்தளவுக்கு உண்மை?**

ஒரு மேலைத்தேய மருத்துவர் என்ற வகையில், இந்த பப்பா இலை மருத்துவம் பற்றி கூறுவதற்கு எதுவுமில்லை. ஏன் என்றால் 98 வீதமானோருக்கு பாப்பா இலை கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் டெங்கு சாதாரணமாக குணமடைந்துவிடும். ஆகவே இது பப்பா இலையினால்தான் குணமடைந்ததா என்பதை சரியாக கூறமுடியாது. ஆனால் என்னுடைய தாழ்மையான வேண்டுக்கோள் என்னவெனில், பப்பா இலை போன்ற மருத்துவ முறைகளில் தங்கியிருக்காமல் மேலைத்தேய மருத்துவர் ஒருவரை அணுகி உரிய முறையில் மருந்துகளை உட்கொள்வது நல்லது.



ரிம்சாத்
திருகோணமலை


**அடிக்கடி கொட்டாவி வருகிறது. ஏதாவது குறைப்பாட்டின் காரணமாகவா இந்த பிரச்சினை வருகிறது?**

இரவில் சரியாக உறக்கம் இல்லாதவர்களுக்கு இந்த பிரச்சினை வருவதுண்டு. தூங்கும்போது ஆழ்நிலைக்கு மனது போகாவிட்டால் இந்த பிரச்சினை வரும். அது ஒன்று. மற்றது சுவாச பிரச்சினைகள் இருந்தாலும் இந்த பிரச்சினை வரலாம், ஆகவே முதலில் உங்களுக்கு சரியாக தூக்கம் வருகிறதா என்பதை நீங்கள் பரிசோதித்து பார்க்க வேண்டும். அதற்கென்று சில பரிசோதனைகள் உள்ளன. அந்த பரிசோதனைகளை செய்து, வைத்தியரை அணுகுவது நல்லது.

ரஞ்சனி
சாவகச்சேரி

**தாயும் தகப்பனும் ஒரே Blood group அவர்களுக்கு பிறந்த குழந்தையும் ஒரே Blood group . இதனால் குழந்தைக்கு ஏதாவது பிரச்சினை வருமா?**


எதுவிதமான பிரச்சினையும் வராது. ஒரே ஜீன் உடையவர்கள் திருமணம் செய்தால், அதாவது உறவினர்களுக்குள்ளே திருமணம் செய்துக் கொண்டால், பிறக்கும் குழந்தை சிக்கல்களுடன் பிறக்க வாய்ப்புண்டு. ஆனால் தாயாருடைய இரத்த வகை Negative ஆக இருந்து வயிற்றிலிருக்கும் குழந்தையின் இரத்த வகை Positive ஆக இருப்பின் குழந்தை பிறக்கும்போது சிக்கல்கள் வரலாம்.



சிந்து
மோதர

**பிரசவத்தின் பின்னர் தயிரோயிட் பிரச்சினை வருவது வழக்கமா?**

தயிரோயிட் பிரச்சினை என்பது ஒருவருக்கு எந்த சந்தர்ப்பத்திலும் வரலாம். பிரசவத்திற்கு பின்னர்தான் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புக்கள் உண்டு என சொல்லுவதற்கில்லை. ஆனால் பிரசவ சமயத்தில் ஹோர்மோன் சுரப்பிகளில் ஏற்படக்கூடிய சில மாற்றங்களும் தயிரோயிட் ஏற்படுவதற்கு சிறிய பங்களிப்பினை வழங்குகிறது. தயிரோயிட் அறிகுறிகள் தெரிந்தால் அதற்கான பரிசோதனைகளை செய்து மருந்துகளை உட்கொள்ளலாம். T4 TSH இந்த பரிசோதனைகளை செய்து பிரச்சினைகளை அறிந்துக்கொள்ளலாம்.




வேலம்மாள்
கொச்சிக்கடை

கடந்த ஓரிரு வாரமாக ஒரு கண்ணில் பார்வை குறைந்துள்ளது. காரணம் என்ன?

அவர் முதியவராக இருந்தால் அவருக்கு கண் பொறை நோயாக இருக்கலாம். அல்லது நீரிழிவு சம்பந்தமான வியாதிகள் இருந்தாலும் பிரச்சினை வரலாம். அல்லது கண்ணோடு தொடர்புடைய optic நரம்பில் தளர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே உடனடியாக ஒரு கண் வைத்தியரை அணுகுவது நல்லது.

ஆரோக்கியம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை
வைத்தியர் இறைவனுக்கு இன்றே எழுதுங்கள்

141/3 F , Union place
colombo - 02
info@vikatakavi.lk





2014 இன் சிறந்த திரைப்படம்




சிறந்த
இசையமைப்பாளர்






சிறந்த இயக்குனர்
பா.ரஞ்சித்
படம் - மெட்ராஸ்



# விகடகவி விருதுகள் 2014

சிறந்த நகைச்சுவை நடிகர்





சிறந்த நடிகர் - சிம்ஹா




சிறந்த நடிகை


Entertaine of the year


Mass Hero of the year




# Conquer the world with Global Qualifications!

Computing | Civil Engineering | Construction
Telecommunication Engineering | Biomedical Science | Law
Business Management | Software Engineering
Computer Networking

from Degree Foundations to Masters..

International Collabortions

PEARSON

UNIVERSITY OF WOLVERHAMPTON
KNOWLEDGE • INNOVATION • ENTERPRISE

London South Bank University

Awards & Recognitions

BCAS Awarded "Performance Excellence" for the years 2010 & 2011 by Edexcel - UK

Ranked as **No.1 Higher Education Provider** (Private Sector) - Survey by **LMD**

ISO 9001:2008 CERTIFIED

## Degree Foundations

IEF - Engineering Foundation
ACCESS - IT Foundation with English
BMAC - Business Management Foundation

## BTEC HNDs

Telecommunication Engineering | Quantity Surveying
Civil Engineering | Computing / Systems Development
Marketing | HR Management | Business Management
Hospitality Management | Biomedical Science | Law

## Top-Up Degrees

BSc (Hons) in Quantity Surveying | LLB (Hons) in Law
BA (Hons) in Business Management
BSc (Hons) in Computing

## Masters Degrees

MBA | LLM | MSc in IT
MSc Construction Project Management

16 YEARS of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

**Corporate Office**
32, Dharmarama Road,Colombo 6,
Sri Lanka.
**Tel : 011 255 9 255**

www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Doha - Qatar

வெற்றிகரமான

# இல்லத்தரசி

கடையில் உணவுகளை வாங்காமல், வீட்டிலேயே சுவையான , ஆரோக்கியமான சமையல்களை சமைத்து, வீட்டிலுள்ள அனைவரையும் சந்தோஷமாக வைத்திருங்கள்.

வீட்டை சுத்தமாகவும், ஒரு ஒழுங்கிலும் வைத்திருங்கள். அப்பொழுது வீட்டில் இருப்பவர்களின் மன அழுத்தம் குறையும்.

நீங்கள் உங்கள் இல்லத்தின் அரசி மட்டுமல்ல, தளபதியும்கூட ஆகவே உங்கள் வீட்டு வேலைகளையும், கணவன் பிள்ளைகளின் வேலைகளையும் அட்டவணைப்படுத்தி திட்டமிடுங்கள்.

அதிகாலையில் எழுந்திருங்கள். அப்பொழுது வேலைகளை சோர்வின்றி ஆரம்பிக்கலாம். நாளும் உற்சாகமானதாக இருக்கும்.

உங்கள் குடும்ப சுற்றுப்புற சூழலை சுகாதாரமானதாக வைத்திருங்கள். அது உங்களுக்கும் உங்கள் அன்பிற்குரியவர்களுக்கும் நல்லது.


உங்கள் கணவரிடம் நீங்கள் மனம் விட்டு பேசுங்கள். நீங்கள் அவரிடம் எதிர்பார்க்கும் விடயங்களை வெளிப்படையாக சொல்லுங்கள்.



## MOST WICKETS




உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் 39 போட்டிகளில் விளையாடியுள்ள அவுஸ்திரேலியாவின் முன்னால் வேகப்பந்து வீச்சாளர் க்லென் மக்ராத் 71 விக்கட்டுக்களை வீழ்த்தி அதிக விக்கட்டுகளை வீழ்த்தியவர்கள் வரிசையில் முன்னிலை வகிக்கிறார்.



## MOST RUNS

1992 ஆம் ஆண்டு முதல் உலகக்கிண்ண போட்டிகளில் கலந்துக்கொண்ட சச்சின் டெண்டுல்கார் 45 போட்டிகளில் விளையாடி 2278 ஓட்டங்களை குவித்து முன்னிலையில் உள்ளார். அத்துடன் உலகக்கிண்ணத்தில் அதிக சதங்களை அடித்த வீரர் எனும் பெருமையும் சச்சினையே சாரும். (6 சதங்கள்)

## HIGH SCORE



உலகக்கிண்ண போட்டியொன்றில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர் எனும்பெருமையை தென் ஆப்பிரிக்க அணியின் வீரர் கெரி கர்ஸ்டன் தன்னகத்தே வைத்துள்ளார். 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ணத்தில் UAE அணிக்கு எதிராக இவர் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்ட 188 ஓட்டங்கள் இதுவரை முறியடிக்கப்படவில்லை.

## MOST CATCHES

உலகக்கிண்ண போட்டிகளில் அதிக பிடிகளை எடுத்த வீரர் எனும் சாதனைக்கு சொந்தக்காரர் அவுஸ்திரேலிய அணியின் முன்னால் தலைவர் ரிக்கி பொண்டிங். இவர் 46 போட்டிகளில் 28 பிடிகளை எடுத்துள்ளார்.






## HIGHEST TOTAL

உலகக்கிண்ணத்தில் போட்டியொன்றில் அதிக ஓட்டங்களை குவித்த அணி எனும் சாதனையை இந்தியா தக்கவைத்துள்ளது. 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் பெர்முடா அணிக்கெதிராக இந்திய அணி 413 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.



## MOST DISMISSALS

ஒரு விக்கெட் காப்பாளராக உலகக்கிண்ண போட்டிகளில் அதிக ஆட்டமிழப்புகளை நிகழ்த்தியவர் எனும் சாதனைக்கு சொந்தக்காரர் அவுஸ்திரேலியாவின் அடம் கில்க்ரிஸ்ட். 32 போட்டிகளில் கலந்துக்கொண்டு 52 ஆட்டமிழப்புகளை மேற்கொண்டுள்ளார்.

சிந்திப்போம்...



சுகி சிவம்

# உறவுகள் மேம்பட

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை ( EGO ) விடுங்கள்.

அர்த்தம் இல்லாமலும் , பின்விளைவு அறியாமலும் , பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.

எந்த விசயத்தையும் , பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள் ( Diplomacy ) விட்டுக்கொடுங்கள் ( Compromise ).

சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள். ( Tolarance )

எல்லோரிடத்திலும், எல்லா விசயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ, சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.



சுவாமி சிவானந்தா

# வெற்றி நிச்சயம்

தடைகள் வெற்றியின் புதையல், தடங்கல் வெற்றியின் தடங்கள்.

முடியாது என்று சிலந்திகல்கூட ஒதுங்குவதில்லை. முதுகெலும்புள்ள மனிதன் ஒதுங்கலாமா?

அவமதிப்பு, அலட்சியம் , அவமானம் இவையாவும் அக்கினிக்குஞ்சுகள். விண்ணில் பாயும் நம் வெற்றிக்கலனுக்கான எரிசக்திகள்.

உகந்ததை தேர்ந்தெடுத்து உறுதியாக செயற்படுபவர்கள் உருப்படுகிறார்கள்.

நன்கு புரிந்துக்கொள் விளையாட்டிலும் சரி , படிப்பிலும் சரி , தொழிலும் சரி , வெற்றிப்பெற்றவர்கள் ஒரு நொடியில் வரவில்லை.

தொகுப்பு : தினேஷ் குமார்.J

## SCHEDULE

Sat Feb 14 : 03:30 IST
1st Match, Pool A
New Zealand v Sri Lanka
Hagley Oval, Christchurch

Sat Feb 14 : 09:00 IST
2nd Match, Pool A
Australia v England
Melbourne Cricket Ground

Sun Feb 15 : 06:30 IST
3rd Match, Pool B
South Africa v Zimbabwe
Seddon Park, Hamilton

Sun Feb 15 : 09:00 IST
4th Match, Pool B
India v Pakistan
Adelaide Oval

Mon Feb 16 : 03:30 IST
5th Match, Pool B
Ireland v West Indies
Saxton Oval, Nelson

Feb 17 : 03:30 IST
6th Match, Pool A
New Zealand v Scotland
University Oval, Dunedin

Feb 18 : 09:00 IST
7th Match, Pool A
Afghanistan v Bangladesh
Manuka Oval, Canberra

Feb 19 : 03:30 IST
8th Match, Pool B
UAE v Zimbabwe
Saxton Oval, Nelson

Feb 20 : 06:30 IST
9th Match, Pool A
New Zealand v England
Westpac Stadium, Wellington

Feb 21 : 03:30 IST
10th Match, Pool B
Pakistan v West Indies
Hagley Oval, Christchurch

Feb 21 : 09:00 IST
11th Match, Pool A
Australia v Bangladesh
Brisbane Cricket Ground,
Woolloongabba, Brisbane

Feb 22 : 03:30 IST
12th Match, Pool A
Afghanistan v Sri Lanka
University Oval, Dunedin

Feb 22 : 09:00 IST
13th Match, Pool B
India v South Africa
Melbourne Cricket Ground

Feb 23 : 03:30 IST
14th Match, Pool A
England v Scotland
Hagley Oval, Christchurch

Feb 24 : 09:00 IST
15th Match, Pool B
West Indies v Zimbabwe
Manuka Oval, Canberra

Feb 25 : 09:00 IST
16th Match, Pool B
Ireland v United Arab Emirates
Brisbane Cricket Ground,
Woolloongabba, Brisbane

Feb 26 : 03:30 IST
17th Match, Pool A
Afghanistan v Scotland
University Oval, Dunedin

Feb 26 : 09:00 IST
18th Match, Pool A
Bangladesh v Sri Lanka
Melbourne Cricket Ground

Feb 27 : 09:00 IST
19th Match, Pool B
South Africa v West Indies
Sydney Cricket Ground

Feb 28 : 06:30 IST
20th Match, Pool A
New Zealand v Australia
Eden Park, Auckland

Feb 28 : 12:00 IST
21st Match, Pool B
India v UAE
Western Australia
Cricket Association Ground,
Perth

Mar 1 : 03:30 IST
22nd Match, Pool A
England v Sri Lanka
Westpac Stadium, Wellington

Mar 1 : 09:00 IST
23rd Match, Pool B
Pakistan v Zimbabwe
Brisbane Cricket Ground,
Woolloongabba, Brisbane

Mar 3 : 09:00 IST
24th Match, Pool B
Ireland v South Africa
Manuka Oval, Canberra

Mar 4 : 06:30 IST
25th Match, Pool B
Pakistan v UAE
McLean Park, Napier

Mar 4 : 12:00 IST
26th Match, Pool A
Australia v Afghanistan
Western Australia
Cricket Association Ground,
Perth

Mar 5 : 03:30 IST
27th Match, Pool A
Bangladesh v Scotland
Saxton Oval, Nelson

Mar 6 : 12:00 IST
28th Match, Pool B
India v West Indies
Western Australia
Cricket Association Ground,
Perth

Mar 7 : 09:00 IST
30th Match, Pool B
Ireland v Zimbabwe
Bellerive Oval, Hobart

Mar 8 : 03:30 IST
31st Match, Pool A
New Zealand v Afghanistan
McLean Park, Napier

Mar 8 : 09:00 IST
32nd Match, Pool A
Australia v Sri Lanka
Sydney Cricket Ground

Mar 9 : 09:00 IST
33rd Match, Pool A
England v Bangladesh
Adelaide Oval

Mar 10 : 06:30 IST
34th Match, Pool B
India v Ireland
Seddon Park, Hamilton

Mar 11 : 09:00 IST
35th Match, Pool A
Scotland v Sri Lanka
Bellerive Oval, Hobart

Mar 12 : 06:30 IST
36th Match, Pool B
South Africa v UAE
Westpac Stadium, Wellington

Mar 13 : 06:30 IST
37th Match, Pool A
New Zealand v Bangladesh
Seddon Park, Hamilton

Mar 13 : 09:00 IST
38th Match, Pool A
Afghanistan v England
Sydney Cricket Ground

Mar 14 : 06:30 IST
39th Match, Pool B
India v Zimbabwe
Eden Park, Auckland

Mar 14 : 09:00 IST
40th Match, Pool A
Australia v Scotland
Bellerive Oval, Hobart

Mar 15 : 03:30 IST
41st Match, Pool B
UAE v West Indies
McLean Park, Napier

Mar 15 : 09:00 IST
42nd Match, Pool B
Ireland v Pakistan
Adelaide Oval

Mar 18 : 09:00 IST
1st Quarter-Final
TBC v TBC (A1 v B4)
Sydney Cricket Ground

Mar 19 : 09:00 IST
2nd Quarter-Final
TBC v TBC (A2 v B3)
Melbourne Cricket Ground


Mar 20 : 09:00 IST
3rd Quarter-Final
TBC v TBC (A3 v B2)
Adelaide Oval

Mar 21 : 06:30 IST
4th Quarter-Final
TBC v TBC (A4 v B1)
Westpac Stadium, Wellington

Mar 24 : 06:30 IST
1st Semi-Final - TBC v TBC
Eden Park, Auckland

Mar 26 : 09:00 IST
2nd Semi-Final - TBC v TBC
Sydney Cricket Ground

Mar 29 : 09:00 IST
Final - TBC v TBC
Melbourne Cricket Ground




# மீத்தேன் திட்டம் என்றால் என்ன?



நண்பரே, கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய செய்தி. தயவுசெய்து படியுங்கள். படிக்க நேரமில்லை என்றால் share மட்டுமாவது செய்யுங்கள். அக்கறை உள்ள தமிழன் தெரிந்து கொள்ளட்டும். 2010 ஆம் ஆண்டு மன்மோகன்சிங் மீத்தேன் வாயு திட்டத்தை பற்றி முதன்முதலாக அறிவித்தார். அவர் கூறியதாவது, இந்தியாவில் இயற்கை எரிவாயுவின் பயன்பாடு கடந்த ஆண்டை விட 18% அதிகரித்துள்ளது. அதனால் இந்தியாவில் மீத்தேன் எடுக்கப்பட வேண்டும் ' என்று கூறினார். அதற்காக நடத்திய ஆய்வில் இந்த மீத்தேன் எரிவாயு தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளில் அதாவது காவிரி டெல்டா பகுதிகளில் பூமிக்கடியில் அதிகம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்காக நடத்திய ஏலத்தில் Great Eastern Energy Corporation Limited என்ற வடமாநில தனியார் நிறுவனத்திற்கு தமிழகத்தில் மீத்தேன் எடுக்கும் ஒப்பந்தத்தை மத்திய அரசு வழங்கியது. ஆனால் பூமிக்கடியில் இருந்து மீத்தேன் எடுக்கும் முறையை பற்றி அறிந்தால் நமது இதயமே பதறும். அதை பற்றி சுருக்கமாக காணலாம்.

இந்த மீத்தேன் திட்டத்திற்காக 1,64,819 ஏக்கர் விவசாய நிலங்கள் பலியாக உள்ளன. கீழே உள்ள செயல்முறைகள் பசுமை நிறைந்த வயல்களில் செய்யப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மீத்தேன் வாயுவானது பூமிக்கடியில் ஆயிரக்கணக்கான அடிகளுக்கு கீழே பாறை இடுக்குகளில் சிக்கி நிறைந்துள்ளது. இதை Hydraulic Fracturing என்று அழைக்கப்படும் ' நீரியல் விரிசல் ' முறையை பயன்படுத்துவார்கள். முதலில் செங்குத்தாக ஆயிரக்கணக்கான அடிகள் துளைகளை இடுவார்கள். பின்பு கிடைமட்டமாக பல கிலோமீட்டர்களுக்கு துளைகளை இடுவார்கள். பின்னர் நிலத்தடி நீர் முழுவதையும் வெளியேற்றி விடுவார்கள். பின்னர் அந்த துளைகளின் வழியே நீரையும் , 600 க்கும் அதிகமான நச்சுத்தன்மை உடைய வேதிப்பொருட்களையும் அதிக அழுத்தத்தில் செலுத்தி பாறைகளை வெடிக்கச் செய்து அடைபட்டுள்ள மீத்தேனை வேதிப்பொருட்களோடு வெளியே கொண்டு வருவார்கள். பின்னர் அந்த வேதிப்பொருட்களிலிருந்து மீத்தேனை மட்டும் தனியாக பிரித்து எடுப்பார்கள். மீதமுள்ள நச்சுத்தன்மை வாய்ந்த வேதிக்கழிவுகள் பூமியிலேயே கொட்டப்படும். சற்றே சிந்தித்து பாருங்கள். தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீரை முற்றிலும் உறிஞ்சி எடுத்து விட்டால் , அழுத்தக்குறைவு காரணமாக கடல்நீர் நிலத்திற்குள் புகுந்துவிடும். நிலம் உள்வாங்கும். பசுமையான வயல்வெளிகள் பாலைவனமாக மாறும். மேலும் வேதிப்பொருட்களால் நிலம் நஞ்சாகும். சுற்றுவட்டாரப் பகுதிகளில் குடிநீர் விஷமாகும். இதை போன்ற திட்டம் ஏற்கனவே பல நாடுகளை காவு வாங்கியது. தற்போது தமிழகத்திற்கும் வந்துள்ளது. இவ்வளவு பெரிய ஆபத்தான திட்டத்தை அரசியல் அமைப்புகளும் ஊடகங்களும் மறைக்கின்றன. இதை மக்களுக்கு தெரியபடுத்தவேண்டியது நமது கடமை அல்லவா. நாம் அனுபவித்த இயற்கை வளங்களை நமது சந்ததிகளும் அனுபவிக்க வேண்டாமா...........

நடிகர் பார்த்தீபனின் முகப்புத்தக பதிவு


HEMYS
BRIDAL &
BEAUTY CARE
HEMYS BRIDAL & BEAUTY CARE
89/2 1/1, FUSSEL'S LANE
COLOMBO 06
011 434 6834
077 313 5585
80/1, NEW CHETTY STREET,
COLOMBO 13
011 485 8756

# காட்சிப் பேழை





கடவுள் படைத்த இந்த அழகிய உலகில் அழகு கொட்
காணப்படுகின்றன. அவற்றை ரசிப்பதற்காக கடவுள்
அந்த கண்ணில் தோன்றும் காட்சி யாவும் மனதில் பதி
காண கிடைத்தால் எவ்வளவு சந்தோசம்?. ஆம் அதையும்
நொடிகளையும் தருணங்களையும் சிறைப்பிடிப்பதற்க்காக மனித
ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு திறமைமிக்க புகைப்பட க
வகையில் இம்மாதம் கொழும்பை சேர்ந்த இளம் புகைப்பட க




க்கிடக்கிறது. அவை அசையும் அசையா அழகுகளாக
மக்கு அழகிய இரு கண்களை கொடுத்திருக்கிறார்.
றது. நமக்கு அழகாக தோன்றும் காட்சிகள் பிறருக்கும்
னிதன் நிஜமாக்கினான். இயற்கையின் அழகையும் கடக்கும்
ன் உருவாக்கிய மூன்றாவது கண்தான் இந்த காட்சி பேழை.
ஞர்களை நாங்கள் அறிமுகப்படுத்த போகிறோம். அந்த
லைஞர் பிரசன்னா யோகியை நாம் அறிமுகப்படுத்துகிறோம்.

]


YOGEE PHOTOGRAPHY
Nikon
Prasanna Yogee
www.facebook.com/yogeeview

ஐந்து வருடங்களுக்கு முன்னர் எனக்கு புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் வந்தது. அதற்கு காரணமாக அமைந்தது நான் பார்த்த ஒரு புகைப்படம்தான். Macro Photography முறையில் ஒரு பூச்சியை அழகாக படம் எடுத்திருந்தார்கள். அதைப்பார்த்ததும் எனக்குள்ளும் ஒரு ஆர்வம் வந்தது.


Photography இல் Wild life , Nature , Street photography களில்தான் எனக்கு அதிகம் ஆர்வமுள்ளது. அதிலும் குறிப்பாக இயற்கை காட்சிகளை விரும்பி எடுப்பதுண்டு.




நான் எதிர்க்காலத்தில் ஒரு நல்ல Wild life photographer ஆக வரவிரும்புகிறேன். அதற்காக என்னை நான் தயார்படுத்தி வருகிறேன். சில நேரங்களில் நான் ஒரு புகைப்படத்தை எடுக்கும்போது எனக்கு சந்தோஷமாக இருக்கும். ஆனால் முழுமையான "திருப்தியை தராது. உண்மைதான் ஒரு விடயத்தில் நான் உடனே திருப்தியடைந்துவிட்டால் சாதிக்க முடியாது.




Photography க்கும் மனநிலைக்கும் தொடர்பு இருக்கிறது.
என்னைப்பொருத்தவரையில், புகைப்படம் எடுப்பது எமது மன உறுதியை அதிகரிக்கும்.






ஒவ்வொரு நாளும் குறைந்தது 30 நிமிடங்கள்
இந்த துறைக்காக நான் செலவிடுவதுண்டு.
அதுவே விடுமுறை நாளாக இருந்தால்
8 மணித்தியாலங்கள் செலவிடுவேன்.
மேலும் இந்த துறையுடன் சம்பந்தப்பட்ட மென்பொருள்கள், நுட்பங்களை
பற்றியெல்லாம் கற்றுக்கொள்வது வழக்கம்.



லிங்கனின்

# 10 தத்துவம்

'அதிகமாக பேசாமல்
மௌனம் காப்போம்'

'எஜமானாய் இருக்கும் முன்னர்
சேவகனாய் இரு'

'பொறுத்தால் காரியம் வாய்க்கும்
வாய்க்காது பதறினால்'

'ஒரு மரத்தை வெட்ட 6 மணித்தியாலம்
கொடுக்கப்பட்டால், கோடாரியை கூர்மையாக்க அதில்
4 மணித்தியாலங்களை செலவிடுவேன்'.

'நன்மை நடக்கும் என்றால், தடைகளை மீறலாம்'

'நாளை என்பது வரலாம், வராமல் போகலாம்,
அதைக்குறித்து இன்று கவலைப்படாதே.'


'தோல்வி தவறல்ல
தோல்வியிலேயே தங்கிவிடாதே'

'சந்தோஷத்தை உனக்குள் தேடு.
இருப்பதைக்கொண்டு திருப்தியாய் இரு.'

'கெட்டதிலும் உள்ள நன்மையை பார்.'

எத்தனை வருடங்கள் வாழ்ந்தோம் என்பது கணக்கில்லை,
வாழ்ந்த காலத்தில் முழுமையாக வாழ்ந்தோமா என்பதே
கணக்கு.




பசியுடன்
805 மி


ல்லியன்


கலோரி
கல்லூரி
இரவு உறக்கத்திற்கு முன்னர்
தவிர்க்கவேண்டிய
அதிகலோரி உணவுகள்
பாஸ்தா
பீட்சா
இனிப்பு
இறைச்சி
சாக்லட்
மரக்கறி
மதுபானம்
சீஸ் பர்கர்
மிளகாய் சோஸ்
நொருக்கு தீனி

Look at the chart and say the COLOUR not the word

YELLOW BLUE ORANGE
BLACK RED GREEN
PURPLE YELLOW RED
ORANGE GREEN BLACK
BLUE RED PURPLE
GREEN BLUE ORANGE

**Left – Right Conflict**

**Your right brain tries to say the colour but your left brain insists on reading the word.**

# நீங்கள் இடது மூளைக்காரரா? வலது மூளைக்காரரா?

எதையும் விபரமாக பார்ப்பவர்

அதிகம் வாசிப்பவர்

நிறைய கேட்பவர்


இலக்கங்களில் பேசுவார்கள்

நேரம் தவற மாட்டார்கள்

ஆபத்தை எதிர்க்கொள்ள விரும்ப மாட்டார்கள்

எதிலும் வித்தியாசத்தை எதிர்ப்பார்ப்பார்கள்

எப்படி என்று கேட்பதைவிட ஏன் என்று கேட்பார்கள்




புதிது புனைபவர்கள்

கலையுடன் தொடர்புடையவர்கள்


காட்சிப்படுத்தி பார்ப்பார்கள்

உணர்ச்சிப்பூர்வமானவர்கள்

சுறுசுறுப்பானவர்கள்

ஆபத்தை எதிர்கொள்வார்கள்

ஏன் என்று கேட்பதைவிட எப்படி என்று கேட்பார்கள்



உறுதியான கண்ணை இனங்காண்பது எப்படி?

1. கையை மேற்காட்டியவாறு முக்கோணமாக நீட்டி பிடித்துக்கொள்ளுங்கள்

2. ஒரு மின் ஆளி நடுவில் தெரியும் வண்ணம் கையை பிடித்துக்கொள்ளுங்கள்.

3. ஒவ்வொரு கண்ணையும் மாறி மாறி மூடி பாருங்கள்

4. எந்த கண்ணை மூடும்போது ஆளி நடுவில் தெரிகிறதோ, அதுவே உறுதியான கண்.

## உங்களில் ஆதிக்கம் செலுத்தும் மூளையை கண்டறியுங்கள்

1. மூடப்பட்டிருக்கும் ஒரு கதவினூடாக எந்த காதை வைத்து கேட்பீர்கள்?

2. உங்கள் கண்களில் கூர்மையானது எது? ( இடது பக்கம் உள்ள எடுத்துகாட்டை பாருங்கள் )

3. சாப்பிடுவதற்கும் எழுதுவதற்கும் எந்த கையை பயன்படுத்துகிறீர்கள்?

4. ஒரு பந்தினை உதைக்க எந்த காலை உபயோகிக்கிறீர்கள்?

வலது உறுப்புக்கள் எனின் : இடது மூளை

இடது உறுப்புக்கள் எனின் : வலது மூளை

# காந்தியடிகளின் காலணிகள்



மகாத்மா காந்தி அவர்கள் ஒரு நாள் புகைவண்டியில் ஏறும்போது அவர் அணிந்த காலணிகளில் ஒன்று தவறுதலாக கழன்று கீழே விழுந்துவிட்டது. வண்டி தனது பயணத்தை ஆரம்பிக்க தயாராகிவிட்டது. உடனே காந்தியடிகள் தன்னுடைய மற்ற காலணியையும் வெளியே எறிந்துவிட்டாராம். புகைவண்டியில் இருந்த அனைவரும் காந்தியடிகளை ஆச்சரியமாக பார்த்தார்கள். உடனே காந்தியடிகள் அமைதியாக சொன்னாராம். என்னிடம் இருந்த ஒரு செருப்பினால் எனக்கு எந்த பயனும் ஏற்படப்போவதில்லை. முதலில் விழுந்த செருப்பை மட்டும் வைத்துக்கொண்டு அதை எடுப்பவனுக்கும் பயனில்லை. அதனால்தான் மற்ற காலணியையும் கீழே எறிந்தேன். யாராவது ஒருவருக்கு பயன்படும் என்று. தனக்கு ஒரு இழப்பு நேர்ந்தபோதும் அந்த இழப்பு மற்றவர்களுக்கு நன்மை தருமொன்றாக அமையவேண்டும் என்று அண்ணல் காந்தி நினைத்தார். நாமும் எமது தினசரி வாழ்வில் இத்தகைய சம்பவங்களுக்கு முகம்கொடுக்க நேரலாம். ஒன்றை இழக்க வேண்டிய சந்தர்ப்பம் வரும்பொழுது, அதை மற்றவர்களுக்காவது நன்மை தரும் இழப்பாக மாற்ற முயற்சிப்போம்.






காலையில் எழும்ப அலாரம் தேவையில்லை.
அவன் மனமே அவனுக்கு அலாரம்.
குளிக்க அட்டாச் பாத்ரும் தேவையில்லை.
குளமும் குட்டையும் போதும்.
ஸ்திரி பண்ண உடைகளும் , டையும் தேவையில்லை,
மானம் மறைக்க ஒருத்துண்டு கோவணம் போதும்.
காலை காக்க ஷாக்ஸ் , ஷூஸ் தேவையில்லை.
சேற்றில் இறங்கி முதலீடு செய்வான்.
அவன் கால் பளபளவென இருக்காது.
சேற்று புண்ணும், குதிங்கால் வெடிப்பும்தான் இருக்கும்.
காலை சாப்பாட்டிற்கு பர்கர் தேவையில்ல,
கஞ்சி,கிழங்கு போதும்.
குளிரூட்டப்பட்ட வேலைத்தளம் தேவையில்லை..
சுட்டெரிக்கும் பட்ட பகலிலும், வெட்ட வெளியில் வேலை செய்வான்.
i5, i7 கணிணிகள் தேவையில்லை ,
ஒற்றை மாடு போதும்.
சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலிகள் தேவையில்லை,
குனிந்த நிலையில் பல மணி நேரம் நாற்று நடுவான்.
இடுப்பளவு தண்ணீரில் இறங்கி வரம்பு வெட்டுவான்.
வைத்தியசாலை காப்புறுதி இல்லை.
யானைகள் , பாம்புகள் தாக்கினாலும் கேட்பதற்கு நாதியில்லை.

ஆனாலும்.. கோப்பரேட் உலகத்திற்கு நாங்கள் கொடுக்கும் மதிப்பை,
ஒரு கோப்பை சோறு தரும் விவசாயிக்கு கொடுப்பதில்லை.

வரப்புயர நீர் உயரும்,
நீர் உயர நெல் உயரும்,
நெல் உயர குடி உயரும்,
குடி உயர கோன் உயரும்.

விவசாயத்தை காப்போம், விவசாயிகளை மதிப்போம்.

ரூபன் பிலிப்



# மூழ்கிப்போன சரித்திரம்




**17** ஆம் நூற்றாண்டிற்கு சொந்தமான போர்க்கப்பல் ஒன்றின் சிதைவுகள் அண்மையில் தெற்கு கரிபியன் பகுதியில் உள்ள டுபெகோ கடற்பரப்பில் சமுத்திர ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. Huis de Kreuningen என்பது அந்த கப்பலின் பெயர். ஒல்லாந்தருக்கும் பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியாளர்களுக்கும் இடையில் நடந்த கடும் போரில் தாக்கப்பட்டு இந்த கப்பல் மூழ்கியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

1677 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி பிரெஞ்சு கடற்படையினர் பாறைகளால் சூழப்பட்ட டுபெகோ வளைக்குடாவை கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஒல்லாந்தருக்கு எதிராக போர் தொடுத்தனர். அந்நாட்களில் ஐரோப்பிய குடியேற்ற வாசிகள் டுபெகோ பகுதியை அவர்களது முக்கிய தந்திரோபாய நிலையமாக பாவித்தனர். கிறிஸ்டோபர் கொலம்பஸ் இன் டுபெகோ வருகையையடுத்து 30 தடவைகள் அந்த பகுதி கைமாறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



டுபெகோ வளைகுடா



இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆய்வாளர்கள் ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டிருந்தார்கள். 17 ஆம் நூற்றாண்டில் நடந்த குறித்த போரில் 2000 பேர் உயிரிழந்ததாகவும் 14 கப்பல்கள் மூழ்கிப்போனதாகவும் வரலாற்று பதிவுகளில் இருந்தாலும் இதுவரை அவை கண்டுபிடிக்கப்படவில்லையென தெரிவித்தனர.




டுபெகோ கடற்பரப்பில் ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் 20 நிமிட ஆழ்கடல் ஆய்வின் விளைவாக முதலில் 20 பீரங்கிகளை கண்டெடுத்தனர். மேலும் தேட ஆரம்பித்த வேளையில் கப்பலின் உடைந்த பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன.

# சினி சவால் - 03

01. ஒரு திரைப்படத்தின் பெயர்



02. ஒரு பாடல்




03. ஒரு பாடலாசிரியர்



இங்குள்ள சவால்களுக்கான சரியான பதில்களை கண்டுபிடித்து வெற்றிபெறும் வாசகர்களுள் ஒரு அதிஷ்டசாலிக்கு 1000 ரூபா பணப்பரிசு வழங்கப்படும்.

**கடந்த இதழின் வெற்றியாளர்**
**நிசாந்தன்**
பருத்தித்துறை

பெயர் :

முகவரி :

தொலைபேசி :

உங்கள் விபரங்களை நிரப்பி சரியான பதில்களுடன் இந்த பக்கத்தை அனுப்பி வையுங்கள்

சினி சவால்
விகடகவி
141/3 F Union place
Colombo 02



DID YOU ENJOY THE
AUGMENTED
REALITY
ADVERTISEMENTS IN
OUR MAGAZINE?

DO YOU WANT YOUR
ADVERTISEMENTS TO
STAND OUT?

Augment your adverts with
AUGMENTED REALITY

layar

ANDROID APP ON
Google play

Available on the
App Store

CALL NOW!
SANJEEV - 0777 692 699
RUBAN - 0771 757 877

# ANGLESZ
## CREATIVE STUDIO

**GRAPHIC DESIGN** | Brand Identity & Marketing Campaigns
(Logo, Flyers, Company Profiles etc)

**PRINTING** | Offset & Digital
(Leaflets, Banners etc)

**BRANDING** | Exhibition Stalls & Signages
(Company Name Boards, Billboards, etc)

---

**ANGLESZ CREATIVE STUDIO**

No: 340/3, Cyril C Perera Mawatha, Colombo 13

+94 777 692 699 | angleszcrst@gmail.com

https://www.facebook.com/angleszcs